**2020 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :**
**திரு. சி. பாண்டு,**
**நகராட்சி பொறியாளர் மற்றும்**
**தனி அதிகாரி(பொ),**
**விருத்தாசலம் நகராட்சி.**

<u>பொருள் எண். 1.</u>

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 31 மேட்டுக்காலனி பகுதியில் குடிநீர் வரவில்லை என பொது மக்கள் புகார் அளித்ததற்கிணங்க, மேற்படி பகுதியை ஆய்வு செய்ததில் அங்குள்ள குடிநீர் குழாய்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டதால், குடிநீர் குழாய்கள் நசுங்கியும், உடைந்தும் உள்ளதால் மேற்படி பகுதியில் புதிய குடிநீர் குழாய் அமைக்கவும் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 8,60,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

<u>பொருள் எண். 2.</u>

விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான 15 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் தின்மும் காலை மாலை என இரண்டு வேலையும் நீரேற்றி குளோரின் கலந்து பாதுகாப்பான குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் பணிக்கு விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு மூலம் 12 நபர்களை நியமித்து தற்போது பணியாற்றி வருகிறார்கள். இந்நிலையில் பொது சுகாதார பிரிவின் மூலம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயங்கி வந்த 1 நபர் மீண்டும் பொது சுகாதார பணிக்கு சென்றுவிட்டதால், குடிநீர் பணி பாதிக்காமல் இருக்க காலியாக உள்ள இடத்திற்கு கூடுதலாக 1 நபரை விருத்தாம்பிகை மகளிர் சுய உதவி குழு மூலம் பணியமர்த்தவும் அதற்கு ஒரு நாள் ஊதியமாக ரூ. 360/– வீதம் 01.10.2020 முதல் 31.12.2020 வரை ஏற்படும் செலவினத்தை ரூ. 32,400/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 3.**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு சுண்ணாம்பு நீர் சப்ளை செய்யும் பணிக்கு 29.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | வித்யா சங்கரி,<br>க/பெ. கணேசமூர்த்தி,<br>தன்பந்திரி மகளிர் குழு,<br>17, கச்சராயர் நகர், குமராட்சி. | 1 கிலோ<br>(ஒன்றிற்கு)<br>ரூ. 10/–. |
| 2. | சிவகுருநாதன்,<br>ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 1 கிலோ<br>(ஒன்றிற்கு)<br>ரூ. 15/–. |

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் தன்வந்திரி மகளிர் குழு குமராட்சி (வித்யா சங்கரி, க/பெ. கணேசமூர்த்தி) என்ற மகளிர் குழு அளித்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**பொருள் எண். 4.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 24 ஜெயில் தெருவில் பொதுபணித்துறை அலுவலகத்திற்கு எதிர்புறம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இருந்த ஆணையாளர் குடியிருப்பு பழுதடைந்த இருந்த காரணத்தினால் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இடித்து அப்புறப்படுத்தப்பட்டு தற்போது அந்த இடம் காலியாக உள்ளது.இந்நிலையில் மேற்படி அந்த இடம் காலியாக உள்ள காரணத்தினால் சமூக விரோதிகள் சிலர் மது அருந்தும் இடமாகவும் , சமூக விரோத செயலுக்கும் பயன்படுத்துவதாக அப்பகுதி பொதுமக்கள் புகார் தெரிவித்தற்கிணங்கவும் , ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் தடுக்கும் விதமாகவும் இந்நகராட்சியில் ஆணையர் குடியிருப்பு இல்லாத காரணத்தினாலும் மேற்படி இடத்தின் ஒரு பகுதியில் புதியதாக ஆணையாளர் குடியிருப்பு கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,95,000/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். `

## பொருள் எண். 5.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 24 ஜெயில் தெருவில் பொதுபணித்துறை அலுவலகத்திற்கு எதிர்புறம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இருந்த ஆணையாளர் குடியிருப்பு பழுதடைந்த இருந்த காரணத்தினால் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இடித்து அப்புறப்படுத்தப்பட்டு தற்போது அந்த இடம் காலியாக உள்ளது.இந்நிலையில் மேற்படி அந்த இடம் காலியாக உள்ள காரணத்தினால் சமூக விரோதிகள் சிலர் மது அருந்தும் இடமாகவும் , சமூக விரோத செயலுக்கும் பயன்படுத்துவதாக அப்பகுதி பொதுமக்கள் புகார் தெரிவித்தற்கிணங்கவும் , ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் தடுக்கும் விதமாகவும் இந்நகராட்சியில் பொறியாளர் குடியிருப்பு இல்லாத காரணத்தினாலும் மேற்படி இடத்தின் ஒரு பகுதியில் புதியதாக பொறியாளர் குடியிருப்பு கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,95,000/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

## பொருள் எண். 6.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 31 ஆலிச்சக்குடி ரோடு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள 1 வது துப்புரவு கோட்ட அலுவலகம் மேல்புறம் காலியாக உள்ள இடத்தில் புதியதாக துப்புரவு அலுவலர் குடியிருப்பு கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5,00,000/ – இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.